படுத்த அந்த இடத்திலேயிருந்து சட்டக் கல்லூரியை விடுவிக்க வேண்டும் என்று தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. எனவே, சட்டக் கல்லூரிக்கென்று நிரந்தரமான ஒரு இடத்தை அமைத்து, அதை யொட்டியே விடுதியையும் அமைத்தால், நலமாக இருக்கும். அதற்காக இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றாலும், ஒரு துணை மதிப்பீட்டின் மூலமாவது நிதியைக் கோரி இதை அமுல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்வித் துறை அந்த முயற்சியை மேற்கொள்ளும்.

Private Secondary Schools

* 83 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government, that some private Secondary Schools have not appointed Physical Instructors, Drawing Masters and Tamil teachers though there is provision to appoint such teachers for the students studying in 6th, 7th and 8th Standards in High Schools;

(*b*) whether the Government have received any representation that those who possess special certificates in the above subjects, should be given age exemption above 30 years; and

(*c*) if so, the action taken thereon?

தனியார் இடைநிலைப் பள்ளிகள்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் படிக்கும் மாணவர் களுக்கு உடற்பயிற்சி, ஓவிய, தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கு வழி வகை இருந்தும், சில தனியார் இடைநிலைப் பள்ளிகளில் அந்த நியமனம் நடைபெறவில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(இ) மேற்கூறிய பாடங்களில் சிறப்புச் சான்றிதழ் பெற்றோருக்கு 30 வயதுக்கு மேல் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று முறையீடு ஏதும் அரசுக்கு வந்ததுண்டா ?

(உ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லே,

(இ) இல்லே.

(உ) இக்கேள்விக்கு இடமில்லே.

திரு. எம். சங்கரலிங்கம் : நடுநிலேப் பள்ளிகளில் பயில்கிற மாணவர்கள் உடற் பயிற்சி பெற வேண்டியது மிகவும் இன்றியமையாதது. உடற் பயிற்சி செய்கிற பழக்கம் சிறு பருவத்திலேயே ஏற்பட்டால்தான், அதன் தொடர்பான விளேயாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படும். இப்போது அகில இந்திய விளேயாட்டுப் போட்டியானுலும், அகில உலக விளேயாட்டுப் போட்டியானுலும், நம் நாட்டு மாணவர்கள் பின்தங்கியே இருக்கிருர்கள். அகில இந்திய விளேயாட்டில் தமிழ்நாடு பின்தங்கியிருக்கிறது. எனவே இதைக் கருத்திலே கொண்டு கல்விக்கூடங்களில், குறிப்பாக நடுநிலேப் பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர்களே நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அத்தகைய கருத்து அரசின் பரிசிலனேயில் இருக்கிறது.

Half-a-Million Job Scheme.

* 84 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) wheher it is a fact that the services of the teachers who worked under the Half-a-Million Job Scheme have not been regularised;

(*b*) if so, the reason therefor; and

(*c*) the steps taken to regularise their services?

ஐந்து இலட்சம் பேருக்கு வேலே வாய்ப்பு திட்டம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐந்து இலட்சம் பேருக்கு வேலேவாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ், பணிபுரிந்த ஆசிரியர்களது பணி வரன்முறை செய்யப்படவில்லே என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(உ) அவர்களது பணிகள் வரன்முறை செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?